**ரத்தோட்ட பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2019 மார்ச் 29 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ரத்தோட்ட பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 418,068 பெறுமதியான தளபாடங்கள், அவற்றைப் பொருத்துவதற்கான சாதனங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் போன்றவை கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அவை மூலதனத்தில் காட்டப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆம் வருடத்தின் இறுதிக் கணக்கில் அதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட ரூபா 4,763,691 மதிப்புள்ள 15 அபிவிருத்தித் திட்டங்கள் மூலதனப் படுத்தப்படவில்லை. | அதன் பெறுமதி கட்டடக் கணக்கில் காட்டப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆம் வருடத்தின் இறுதிக் கணக்கில் அதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | நிதி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 277,559 பெறுமதியான கட்டடங்கள் ஐந்து, பௌதீகரீதியாக காணப்படவில்லை. | பௌதீகரீதியில் இல்லாத சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆம் வருடத்தின் இறுதிக் கணக்கில் அதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | குருவாவ குப்பைகளைப் பிரிக்கும் நிலையத்தைக் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகையான ரூபா 492,910 ஆனது கணக்கில் குறைவாக மதிப்பிடப்பட்டிருந்தது. | கணக்கிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆம் வருடத்தின் இறுதிக் கணக்கில் அதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (உ) | 2014 திசெம்பர் 30 ஆம் திகதி குருவாவ சிறுவர் பூங்காவுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஷரூபா 975,000 பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள், தளபாடங்கள், பொருத்தும் சாதனங்கள் போன்றவை கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் கணக்கில் காட்டப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆம் வருடத்தின் இறுதிக் கணக்கில் அதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஊ) | மீளாய்வாண்டின் சேமிப்பு கடனிருப்பு ரூபா 9,647,470 மேலதிகமாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆம் வருடத்தின் இறுதிக் கணக்கில் அதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (எ) | மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 179,802 மேலதிகமாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆம் வருடத்தின் இறுதிக் கணக்கில் அதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஏ) | மீளாய்வாண்டின் இறுதியில் கடன் நிலுவை ரூபா 713,735 மேலதிகமாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். கணக்கில் அதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஒ) | மீளாய்வாண்டில் பொது சேமிப்புக் கணக்கு ரூபா 56,243 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆம் வருடத்தின் இறுதிக் கணக்கில் அதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மொத்த தொகை ரூபா 85,939,094 உள்ளடங்கிய 7 கணக்குகளுக்குரிய துணை ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளோடு ஒப்பிட்டுப் | மீதிகளில் காணப்படும் மாற்றங்களை ஒப்பிட்டுப் பார்த்து கணக்குகளை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட | ஏற்றுக் கொள்கிறேன். கணக்கில் அதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | |
|---|---|---|
| பார்க்கும்போது ரூபா 19,654,902 பொருந்தாமல் காணப்பட்டது. | வேண்டும். | |

**1.3.3 விளக்கமளிக்காத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1997 ஆம் ஆண்டிலிருந்து மாறாது முன்கொண்டு வரப்பட்டிருக்கும் தெளிவற்ற கணக்கின் மீதியான ரூபா 15,462 தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளில் தேவையான மாற்றங்களைச் செய்து, தெளிவற்ற கணக்கைத் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**1.3.4 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) **கிடைக்க வேண்டிய கணக்குகள்** | | |
| 5 வருடங்களுக்கும் மேலாக கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 4,467,019 ஆகும். | கிடைக்க வேண்டிய மீதிகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஆ) **செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| 5 வருடங்களுக்கும் மேலாக செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 6,744,609 ஆகும். | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**1.3.5 கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான அத்தாட்சிகள் காணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 202,427,244 பெறுமதியான எட்டுக் கணக்குகளுக்குரிய ஆதாரங்கள் முன்வைக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் சரிபார்க்க முடியவில்லை. | புதுப்பிக்கப்பட்டு, பூரணமாக்கப்பட்ட ஆவணங்களும், கணக்கு மீதிகள் சரிபார்க்கப்பட்ட கணக்கெடுப்பு வாரிய அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், நிதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இல 15 பிரதேச சபை சட்டத்தின் 24 ஆம் பகுதி | தெருக்கள் மற்றும் குறுக்குத் தெருக்களின் பெயர் விபரங்களைக் கொண்ட பாதை இருப்புப் பட்டியலொன்றைப் பேணவில்லை. | உடனடியாக பாதை இருப்புப் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு, அதைப் புதுப்பித்து பேணப்பட வேண்டும். | எதிர்வரும் காலத்தில் பாதை சம்பந்தமான ஆய்வுகள் நடத்தப்பட்டு பாதை வரைபடங்களை வரைவது, பாதையின் எல்லைகளைக் குறிப்பிடுவது மற்றும் அதற்குரிய திட்டங்களைத் தயாரிப்பது ஆகியவற்றுக்காக பாதை கணக்கெடுப்புக்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் 218 | சபைக்குச் சொந்தமான அனைத்துக் காணிகளும் கட்டடங்களும் ஒவ்வொரு ஆண்டும் கணக்கெடுக்கப்படவில்லை. | காணிகளும், கட்டடங்களும் கணக்கெடுக்கப்பட வேண்டும். | அக் காலகட்டத்தில் சொத்துக்கள் தொடர்பான ஆவணங்கள் புதுப் பிக்கப்பட்டிருக்காமையால், நிலையான சொத்துக்களை பரிசோதிக்க முடியாமல் இருந்ததோடு, தற்போது அதற்காக ஒரு ஆய்வுக் குழுவை நியமித்திருப்பதனால் அனைத்து காணிகளையும், கட்டடங்களையும் பரிசோதிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,204,547 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,638,851 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 9,528,832 | 9,594,613 | 9,506,423 | 9,390,459 | 8,012,000 | 9,291,442 | 7,728,989 | 9,421,822 |
| (ii) | வாடகை | 3,024,580 | 2,815,531 | 2,646,529 | 1,402,757 | 2,220,000 | 2,524,800 | 2,051,685 | 1,233,756 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள | 750,000 | 902,625 | 902,625 | - | 900,000 | 992,460 | 992,460 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 12,090,678 | - | 4,634,022 | - | 4,943,000 | - | 5,715,639 | - |
| | மொத்தம் | 25,394,090 | 13,312,769 | 17,689,599 | 10,793,216 | 16,075,000 | 12,808,702 | 16,488,773 | 10,655,578 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை நிலுவையிலிருக்கும் வீத வரிகளின் பெறுமதி ரூபா 1,219,752 ஆகவும், அரசாங்க நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா 151,201 ஆகவும் காணப்படுகின்றன. | 2015/08 இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக் கிணங்க நடவடிக்கைளெடுக்கப் பட வேண்டும். | 11 நிறுவனங்களுக்குரிய ரூபா 136,492 தொகையை நீக்குவதற்காக அமைச்சரின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது வரையில் 8 நிறுவனங்களிடமிருந்து ரூபா 8401 அறவிடப்பட்டுள்ளது. |

2.2.3 **ஏக்கர் வரிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரைக்குமான சொத்துக்களுக்கான வரிகள் ரூபா 392,180 பெறுமதியான தொகையானது அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏக்கர் வரிகள் சம்பந்தமாக ஆய்வொன்றை நடத்தி, ஆவணங்களைப் புதுப்பித்து, வரிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதேச சபை சட்டம் 134 (3) பிரிவின் பிரகாரம் சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதியில் சொத்துக்களுக்கான வரிகளை விதிப்பது சம்பந்தமாக வர்த்தமானி அறிவித்தல் இல்லாததாலும், ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் விதத்தில் அந்தக் காணியானது 5 ஹெக்டயாரை விடவும் குறைந்தளவே இருப்பதாலும், சொத்து வரிக்கு உட்படவில்லை. அதனால், இந்தக் காணி சம்பந்தமாக தற்போது ஆய்வொன்று நடைபெற்று வருகிறது. |

2.2.4 **நீர் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை அறவிடப்பட வேண்டிய நீர் கட்டணத்தின் மொத்த நிலுவைத் தொகை ரூபா 7,778,168 | நிலுவைத் தொகைகளை அறவிடத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

2.2.5 **கடை வாடகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை ரூபா 1,402,757 பெறுமதியான கடை வாடகைகள் அறவிடப்படாதிருந்ததோடு, அந்தக் கணக்கு மீதிக்குள் ஒரு வருடத்துக்கும் அதிகமான காலத்துக்குரிய ரூபா 634,623 கணக்கு மீதியொன்றும் காணப்படுகிறது. | வாடகை நிலுவைகள் உடனடியாக அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2016 மார்ச் 17 ஆம் திகதிக்குரிய 2016.'.03 இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் கடைகளை வாடகைக்கு வழங்குதல் தொடர்பான சுற்றறிக்கை 5(i) பத்திக்கேற்ப சபைக்குரிய 91 கடைகளின் வாடகையானது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப் பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதுவும், அதைத் தொடர்ச்சியாக அவதானித்தலும் நடைமுறைப்படுத்த ப்பட வேண்டும். | T.D. ஜயரத்ன மாவத்தை, ரஞ்சன் விஜேரத்ன மாவத்தை, நிகலொயத் தெரு வாரச் சந்தை, நிகொலய தெரு புதிய விற்பனை வளாகம் ஆகிய இடங்களில் அமைந்திருக்கும் கடைகளுக்குரிய தகவல்களை மதிப்பீட்டு அதிகாரிகள் கொண்டு சென்ற போதும், மதிப்பீட்டு அறிக்கை எம்மிடம் ஒப்படைக்கப்படவில்லை. |
| (இ) | மகளிர் விற்பனை வளாகத்தின் மேல் மாடியில் 26 ஆம் இலக்க கடையின், மீளாய்வாண்டின் இறுதி வரை, குறைந்தபட்ச ஏலத் தொகையான ரூபா 300,000 இலிருந்து அறவிடப்பட வேண்டிய மீதித் தொகையான ரூபா 200,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முதலில் ரூபா ஒரு இலட்சத்தைப் பெற்றுக் கொண்டு, மீதி ரூபா 2 இலட்சத்தைப் பின்னர் பெற்றுக் கொள்ளும் ஒப்பந்தத்துக்கு இணங்க இந்தக் கடைகள் வரிசெலுத்துவோருக்கு கையளிக்கப்பட்டதோடு, அப்போதிருந்த தலைவர் 2007 மார்ச் 22 திகதியிட்ட கடிதம் மூலம் இந்தக் கடைக்காக ஒரு இலட்சம் ரூபாயை சபையில் வைப்பிலிடுமாறு கோரி ச.ண.ச தலைவருக்கு எழுத்து மூலமாக அறிவித்திருக்கிறார். அதற்கிணங்க 2019 மார்ச் 21 திகதியிட்ட கடிதம் மூலமாக மேற்கட்ட நடவடிக்கைகளுக்காக உள்ளூராட்சி ஆணையாளரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. |

### 2.2.6 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2000 ஆம் ஆண்டிலிருந்து முன் கொண்டு வரப்பட்ட உரிம கட்டணங்களுக்கான நிலுவைத் தொகை ரூபா 405,686 ஆக இருந்தது. | நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த நிலுவைத் தொகையானது பிரதேச சபை நிறுவப்படுவதற்கு முன்பிருந்தே இருந்து வருவதோடு உரிமம் வழங்கப்பட வேண்டிய இடங்களோ, நபர்களோ சம்பந்தமான பதிவுகள் எவையும் சபையில் காணப்படவில்லை. அதனால் இந்த நிலுவைத் தொகையை ஆவணங்களிலிருந்து நீக்குவதற்காக சம்பந்தப்பட்ட |

| | | |
|---|---|---|
| | | அமைச்சரின் அங்கீகாரத்துக்காக அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2.2.7 ஏனைய வருமானங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கைக்காவல பெல்ஸ்.்.பா போக்குவரத்து தொடர்பாக தனியார் நிறுவனங்கள் நான்கிடமிருந்து 2016 தொடக்கம் 2018 வரை அறவிடப்பட வேண்டிய வருமானத் தொகையான ரூபா 112,000 ஐ அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அப் பணத் தொகையை உடனடியாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த நிலுவைத் தொகையை சரி செய்வதற்காக, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு கடிதம் மூலமாக அறியத் தந்திருப்பதோடு உடனடியாக இந்தப் பணத் தொகையை அறவிட விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகிறேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

**(அ) செயற்திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயற்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த சபை நிதியத்திலிருந்து செயற்படுத்தப்பட வேண்டியதாக அடையாளம் காணப்பட்ட 15 அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2018 ஆம் வருடத்தின் செயற்திட்டங்களை சபை நிதியத்திலிருந்து செயற்படுத்தும் திட்டங்களை செயற்படுத்த முடியாமல் ஆனது, புதிய சபை பொறுப்பேற்றதும் கௌரவ தலைவர் உள்ளிட்ட அமைச்சரவையின் ஆலோசனைகள் உள்ளடக்கப்பட்ட வேறு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டமையால் ஆகும். |

**(ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அன்றாடம் சேரும் கழிவுகளில் 1.25 டொன் அளவு கழிவு உரத் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்பட்டதோடு, மிஞ்சிய கழிவுகள் சுற்றாடலுக்குத் தீங்கு விளைவிக்கும் விதத்தில் அகற்றப்பட்டுக் கொண்டிருந்தன. | உக்கும் கழிவுகள் உர உற்பத்தி போன்ற மாற்றுச் செயல்பாடுகளுக்காக பாவிக்கப்பட வேண்டும். | கழிவுப் பொருள் முகாமைத்துவ மத்திய நிலையத்தில் பணியாற்ற குறைந்தது 03 பணியாளர்களாவது இருக்க வேண்டும். தற்போதைக்கு ஒப்பந்த அடிப்படையில் சுகாதார ஊழியர்கள் 5 பேரை இணைத்துக் கொள்ள விரைவில் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் ரூபா 1,801,826 செலவழித்து கட்டி முடிக்கப்பட்டிருந்த குருவாவ கழிவகற்றல் நிலையத்தில் ஒழுங்கான முறையில் கழிவுகளை வேறுபிரித்து விற்பதன் மூலம் வருமானமீட்டும் செயற்திட்டம் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. | கழிவுகளை அகற்றுவது திறனாகவும், பயனுள்ள விதத்திலும் செய்யப்பட வேண்டும். | கழிவை வேறுபிரிக்கும் நிலையத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பொலிதீன், பிளாஸ்டிக், காட்போட் போன்றவை கொண்டு வரப்படுவதோடு, அவற்றை விற்பனை செய்ய விரைவில் நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சினால் 2017 ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி *NP/SP/SDG/17* இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடையும் திட்டங்கள் எவையும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களுக்கிணங்க நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அபிவிருத்தி மற்றும் ஏனைய திட்டங்களைத் தயாரிக்கும்போது நிலையான அபிவிருத்தி இலக்குகள் கோடிட்டுக் காட்டப்படாத போதும், உள்ளூராட்சி அலுவலகத்தின் விடயங்களான பொதுமக்கள் ஆரோக்கியம், பொதுவான பாதைகள், சுகாதாரம் மற்றும் பொது பயன்பாடுகள் உள்ளிட்டவைகள் பிரதேசத்தின் நிலையான அபிவிருத்திக்கு பங்களிக்கும் திட்டத்தை முதன்மையாகக் கொண்டு வரவுசெலவுத் திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. அதற்கிணங்க எதிர்காலத் திட்டங்களைத் தயாரிக்கும்போது நிலையான அபிவிருத்தி இலக்குகளை இலக்காகக் கொண்டு |

| | | திட்டங்களைத் தயாரிக்க நடவடிக்கை எடுப்பேன். |
|---|---|---|

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1999 முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலத்துக்குள் பல சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 174,687 பிணை உறுதிப் பண மீதியைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை உறுதிப் பண மீதியைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

## 3.3. மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் ஊழியர்களிடையே 09 பதவிகளில் 19 வெற்றிடங்களும், 04 பதவிகளில் 06 மேலதிக ஊழியர்களும் காணப்பட்டார்கள். | வெற்றிடங்களை நிரப்பவும், மேலதிக ஊழியர்களை ஒழுங்குபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்தப் பிரதேச சபையில் காணப்படும் தொழில்நுட்ப அதிகாரி (விஷேட தரம்) மற்றும் அபிவிருத்தி அதிகாரி ஆகிய பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு என்னால் உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக தலைமைச் செயலாளரிடம் ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது. |
| (ஆ) | நீண்ட காலமாக நிலவி வரும், வேலையை விட்டு நீங்கிய மற்றும் மரணமடைந்த ஊழியர்கள் ஆறு பேரிடமிருந்து வர வேண்டிய ரூபா 56,156 கடன் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் தொகை உடனடியாக அறவிடப்பட வேண்டும். | 2018 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரை ஓய்வு பெற்ற, வேலையை விட்டு நீங்கிய மற்றும் மரணித்த ஊழியர்களிடமிருந்து வர வேண்டிய ரூபா 56,156.41 கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**……………………………….**

**விளைவற்ற சொத்துக்கள்**

**………………………….**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பியடிய நூலக வளாகத்தில் அமைந்திருக்கும் சமுதாய மண்டபத்தின் வேலைகளைப் பூர்த்தி செய்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சமுதாய மண்டபக் கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட நல்ல நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். விரைவில், சபையின் வருமானத்திற்கேற்ப அந்த சமுதாய மண்டபத்தின் எஞ்சிய கட்டுமான வேலைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான பணத்தை ஒதுக்கி, அந்தப் பணிகளைப் பூர்த்தி செய்வதுடன், அந்த மண்டபத்தை பயனுள்ள காரியங்களுக்காகப் பயன்படுத்த ஆவண செய்வேன் என்பதை அறியத் தருகிறேன். |
| (ஆ) | 2017 ஜனவரி 18 அன்று புர நெகும திட்டத்தின் கீழ் கிடைக்கப் பெற்ற ரூபா 500,000 பெறுமதியான ப்ரேல் இயந்திரம் உரப் பகுதியில் நிறுவப்பட்டிருந்த போதிலும், அது பாவனையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | அவற்றை திறம்பட பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். விரைவில் அவற்றை திறம்பட பயன்படுத்த நடவடிக்கை எடுப்பேன் என்பதை அறியத் தருகிறேன். |
| (இ) | புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 12,751,577 செலவழித்து 2015 மார்ச் 16 ஆம் திகதி கட்டி முடிக்கப்பட்ட இரண்டு மாடிகளைக் கொண்ட வாரச் சந்தைக் கட்டடம் உபயோகிக்கப்படாமல் காணப்பட்டது. | கட்டடம் நல்ல நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். | இந்தக் கட்டடத்தின் கீழ் மாடியானது கடைகளாகப் பிரிக்கப்பட்டு விலைமனுக் கோரலின் பிரகாரம் விரைவில் வழங்கப்படவிருப்பதோடு, மேல் மாடியில் 2019 ஏப்ரல் 08 ஆம் திகதியிலிருந்து ரத்தோட்ட மக்கள் நூலகம் செயல்பட்டுக் கொண்டிருப்பதை அறியத் தருகிறேன். |
| (ஈ) | பாவனைக்கு உதவாத ரூபா 944,400 பெறுமதியான 7 வாகனங்கள் பழுதுபார்க்கப்பட்டு பாவனைக்கு எடுக்கவோ, அல்லது அகற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருட்கள் கணக்கெடுப்பு வாரியத்தின் பரிந்துரைகள் விரைவாக செயல்படுத்தப்பட வேண்டும். | இந்த வாகனங்கள் அனைத்தையும் விற்பதற்காக விலைமனுக்கள் கோரப்பட்டதோடு 57-5736 எனும் இலக்கத்தைக் கொண்ட நிஸான் அட்லஸ் கெப் ரக வாகனம் ரூபா 786,000 தொகைக்கு விற்பனையாகியுள்ளது. ஏனைய வாகனங்களை அகற்ற ஏலதாரர்கள் மறுத்ததோடு, அவற்றை பகிரங்க ஏல விற்பனையொன்றில் விற்று |

| | | |
|---|---|---|
| | | விட நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

**3.5 பெறுகை**

……………

**பெறுகைத் திட்டம்**

………………………

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கொள்வனவு வழிகாட்டுதல் கையேட்டின் 4.2.1 இணங்க கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்முதல் வழிகாட்டி 4.2.1 அறிவுறுத்தல்கள் செயற்படுத்தப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டமானது தயாரிக்கப்படுமென அறியத் தருகிறேன். |

**4. கணக்களிபபொறுப்பும் நல்லாளுகையும்**

**கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுக்கள் நடத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக் கிணங்க மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நடத்தப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டு முதலாம் காலாண்டில் மாத்திரம் ஒரு குழு நடத்தப்பட்டதோடு 2019 ஆம் ஆண்டிற்கான குழு நடைபெற ஏற்பாடு செய்ய விருப்பதை அறியத் தருகிறேன். |